பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 27 புதன்கிழமை 13.01.2021 கதிர் 300

## யாழ். கலாசார மையம் குறித்து கொழும்பில் விசேட சந்திப்பு

இந்திய அரசால் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தை விரைந்து திறப்பது தொடர்பில் நேற்று கொழும்பில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

இதில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், இந்தியத்

2

# வவுனியாவில் இன்றும் 16 பேருக்குக் கொரோனா பத்து நாள்களில் 147 பேர் தொற்றுடன் அடையாளம்

வவுனியாவில் நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் 16 நபர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் ஒரு பகுதி முடிவுகள் இன்று காலை வெளியாகிய நிலையில் வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணிபுரியும் 16 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வவுனியாவில் கடந்த 10 நாள்களில் மாத்திரம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 147 ஆக அதிகரித்துள்ளது. (100)

# தலைமைப் பதவியை தக்க வைத்தார் ரணில்


## ஐ.தே .க. பொதுச்செயலராகப் பாலித நியமனம்

**கொழும்பு, ஜனவரி 13**

**ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.**

2





## அம்புலன்ஸ் ஊழியர்களுக்கு முதலில் கொரோனா தடுப்பூசி



கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை முதற்கட்டமாக வழங்கும்போது அதில் '1990 சுவசெரிய' அம்புலன்ஸ் ஊழியர்கள் உள்வாங்கப்படுவார்கள்.

கொரோனாக் கட்டுப்படுத்தலுடன்தொடர்புடைய செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடும் குழுக்களில் இவர்களும் பிரதான பங்கு வகிப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவிலுள்ள 1990 சுவசெரிய நிலையத்திற்கு நேற்றுக் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட போது இராஜாங்க அமைச்சர் இவ்வாறு

2

## ஜோசப் பரராஜசிங்கத்தை நான் கண்டதே கிடையாது

### வீண்பழி சுமத்தி என்னைச் சிறையில் அடைத்தது கூட்டமைப்பு என்று கூறுகின்றார் பிள்ளையான்



நான் ஜோசப் பரராஜசிங்கம் என்பவரைக் கண்டதே கிடையாது. இவ்வாறான நிலையில் அவரைக் கொலைசெய்ததாக என் மீது வீண்பழிகள் சுமத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறையில் அடைத்தது.

- இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவரும் மட்டக்களப்பு

2

## கொலை வழக்கிலிருந்து பிள்ளையான் விடுதலை

### வழக்கும் தள்ளுபடி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பான வழக்கிலிருந்து தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐந்து பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் குறித்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

2

## மாஸ்டர் படத்தை திரையிட்ட யாழ். திரையரங்குக்குச் 'சீல்'

### கொரோனாச் சட்டத்தை மீறியதால் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தல்

கொரோனா வைரஸ் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள திரையரங்கம் ஒன்று சுகாதார பிரிவினரால் இன்று 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

2

## தமிழ் அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும்

### அரசை வலியுறுத்தி யாழில் ஓவியக் கண்காட்சியுடன் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஓவியக் கண்காட்சியுடனான போராட்டம் யாழ். நகரில் இடம்பெற்றது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை இந்தக் கண்காட்சியுடனான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை

2

## தமிழ் நாடு மீனவர்கள் 26 பேருக்கும் ஒத்தி வைக்கப்பட்ட 2 வருடச் சிறை!

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் இன்று விடுவித்தது

இலங்கை கடற்பகுதிக்குள் அத்து மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 26 தமிழக மீனவர்களும் அவர்களின் குற்றங்களை ஒப்புக்கொண்ட நிலையில், பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத் தண்டனைவிதித்த ஊர்காவற்றுறை நீதிமன்றம், அவர்களின் படகுகள், தொலைத் தொடர்பு உபகரணங்கள், மீன்பிடி சாதனங்களை அரசுடைமையாக்கவும் உத்தரவிட்டது.

நேற்று இந்த 26 மீனவர்களும் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்ஸன் முன்னிலையில் ஆஜர்

2

## எம்.பி. பதவியையும் இழக்கிறார் ரஞ்சன்

### அஜித் மானப்பெருமவுக்கு அதிஷ்டம்



ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகும் நிலை இருக்கின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

2

## யாழ். மாநகர சபை வளாகத்துக்குள் புதிய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி

### இன்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை புதிய கட்டட வளாகத்துக்குள் யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களின் நினைவுத் தூபி அமைத்தல் உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் இன்றைய சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர

2

## தமிழ் நாடு மீனவர்கள் 26 பேருக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 26 பேரும் தொடர்ச்சியான பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று அற்றவர்கள் என்று உறுதி செய்யப்பட்டமையை அடுத்து நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

வழக்கில் இலங்கையில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி செலஸ்ரியன், குற்றத்தை ஒப்புக் கொண்ட இந்திய மீனவர்களுக்கு உயர்ந்த பட்ச தண்டனை வழங்கும்படி கோரினார்.

“இந்த மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளினால் இலங்கை மீனவருக்குப் பெரும் பாதிப்பு” என்று கூறிய அவர் அவற்றை நீதிமன்றத்தில் விலாவாரியாக விவரித்தார்.

சர்வதேசகடல் எல்லைக் கோடுசம்பந்தமான 1976ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விதிகளுக்கு மாறாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைவதை இந்தியா பார்த்திருக்கின்றது என்று குற்றம் சுமத்திய அவர், இவ்வாறு தவறிழைக்கும் மீனவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் பிரசன்னமாவது தவறு என்றும் கூறினார்.

இந்த மீனவர்கள் தவறுதலாக இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்துவிட்டமையால் அவர்களை மன்னித்து விடுவிக்கும்படி அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பெலினா சாளினி, நிரோஷன் ஆகியோர் கோரினர்.

மீனவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்து அவர்களை விடுவித்தார்.

“இதுதான் கடைசித் தடவை. உங்கள் மீனவர்களிடம் போய்க் கூறுங்கள். அடுத்ததடவை அத்துமீறினால் கட்டாயம் இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்படும். மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களிடமும் சொல்லுங்கள். நிச்சயம் கடும் தண்டனைகள் விதிக்கப்படும்”- என இந்திய மீனவர்களை எச்சரித்தார் நீதிவான்.

வடக்குக் கடற்படைத் தளபதியின் சார்பிலும், கரையோரக் காவல் படைசார்பிலும் பிரசன்னமாகியிருந்த அதிகாரிகளிடம், இனிமேல் அத்துமீறும் இந்திய மீனவர்களைத் தராதாட்சண்யமின்றி கைது செய்து நீதிமன்றில் முன்னிறுத்துமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

## எம்.பி. பதவியையும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர்நீதிமன்றம் நான்கு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தது.

இதன் அடிப்படையிலேயே ரஞ்சனின் எம்.பி. பதவியும் இல்லாமல் போகலாம் எனச் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்படி ரஞ்சன் ராமநாயக்கவின் இடத்துக்கு கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ள அஜித் மானப்பெரும நியமிக்கப்படவுள்ளார்.

## மாஸ்டர் படத்தை திரை ....




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைய தளபதி விஜய் நடித்த ‘மாஸ்டர்’ திரைப்படம் உலகளாவிய ரீதியில் வெளியாகியுள்ளது. இந்தநிலையில், இந்தத் திரைப்படம் இலங்கையில் இன்று அதிகாலை முதல் திரையரங்குகளில் திரையிடப்பட்டன.

அதிகாலை முதல் காட்சியைப் பார்க்க என நேற்று நள்ளிரவு முதல் ரசிகர்கள் யாழ். நகர் பகுதிகளில் குவிந்து நகரிலுள்ள திரையரங்குகளின் முன்பாகக் காத்திருந்தனர்.

அதிகாலை காட்சி திரையிடப்பட்டபோது ரசிகர்கள் பலரும் முண்டியடித்து ரிக்கெட் கொள்வனவில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ். நகர் மத்தியில் அமைந்துள்ள திரையரங்கம் ஒன்றை 14 நாள்கள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

## யாழ். மாநகர சபையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு இன்று மாநகர மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த 8ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டமையைக் கண்டித்து ஐந்து நிமிடம் சபை ஒத்திவைக்கப்பட்டதோடு மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமையைக் கண்டித்து சபை அமர்வு ஐந்து நிமிடங்கள் ஒத்திவைத்தல், யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்நுழைந்தமையை கண்டித்தல் மற்றும் மாநகர சபை எல்லைக்குள் புதிய நினைவுத்தூபி அமைத்தல் ஆகிய மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கொலை வழக்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, 2015ஆம் ஆண்டு தாங்கள் கைதுசெய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட முதலாம், இரண்டாம் எதிரிகளின் வாக்குமூலமானது சுயேச்சையாக வழங்கப்படவில்லை, தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் காரணமாக அந்த வாக்குமூலத்தை வழங்கியிருந்தார்கள், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நேரடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வாக்குமூலம் வழங்கப்பட்டது எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பித்தனர்.

இதன் பிரகாரம் குறித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்ததன் அடிப்படையில் 24ஆம் திகதி மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாது என மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்த நிலையில், வழக்கின் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களை விடுவித்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

## ஜோசப் பரராஜசிங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல அட்டூழியங்களை நல்லாட்சி அரசு செய்தபோது, அதனைக் கண்டு கொள்ளாதவர்கள் இன்று ஊடக தர்மம், சட்டம் ஒழுங்கு, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் குரல் கொடுக்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்கியவர்கள் என்னைத் தண்டிக்க வேண்டும், மற்றவர்களை விடுதலை செய்ய வேண்டும் என இரட்டை முகத்தைக் காட்டுகின்றனர்.

ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு வெற்றி பெற்றார். விடுதலைப் புலிகள் அன்றைய காலத்தில் வெற்றி பெற்றவர்களைக் கொலை செய்துவிட்டு வேறு நபர்களை நியமனம் செய்தனர்.

அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பலர் உள்ளனர். இது தொடர்பில் எந்தவித விசாரணைகளும் இடம்பெறவில்லை - என்றார்.

## தமிழ் அரசியல் கைதி .....









(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டும் எனவும், தெற்கில் உள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது போன்று தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் அரசிடம் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், திலீபனின் நினைவுகூரல், யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி ஆகிய இரண்டு விடயங்களிலும் தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் ஒன்றுசேர்ந்து செயற்பட்டது போன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திலும் அனைவரும் ஒருமித்து செயற்பட்டு கைதிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

## தலைமைப் பதவியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே, இந்தப் புதிய நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கட்சியின் அலுவலகப் பொறுப்பாளர்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் உதவித் தலைவராக முன்னாள் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம், கட்சியின் தவிசாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். ஏ.எஸ்.எம்.மிஸ்பாஹ் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த செயற்குழுக் கூட்டத்தில், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராகத் தொடர்ந்தும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க செயற்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அம்புலன்ஸ் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர், 1990 சுவசெரிய நிலையத்திலுள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடி அங்குள்ள குறைபாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

கொரோனாக் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய போக்குவரத்துக்கான வாகனங்களில் அம்புலன்ஸ் வாகனங்கள் 297 மற்றும் சாரதிகள் உள்ளிட்ட ஆயிரத்து 399 ஊழியர்கள் காணப்படுகின்றனர்.

சுவசெரிய நிலையத்துக்கு நாளொன்றுக்கு சுமார் 5 ஆயிரத்து 300 தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றன. இதுவரையில் ஒட்டுமொத்தமாக 34 லட்சத்து 24 ஆயிரத்து 590 தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன.

சுவசெரியவினூடான சேவையொன்றுக்கு நாளொன்றுக்கான செலவு 5 ஆயிரத்து 332 ரூபாவாகும். எனினும், அந்தச் சேவை பொதுமக்களுக்கு முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. இதற்காக கடந்த 10 மாதங்களில் 1,500 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது - என்றுள்ளது.

## யாழ். கலாசார மையம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணைத் தூதுவர், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், யாழ். மாநகர ஆணையாளர் ரி.ஜெயசீலன், யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் உள்ளிட்டோர் பங்குபற்றினார்கள்.

குறித்த கூட்டத்தில் யாழ். மாநகர சபையால் கலாசார மையத்தைப் பராமரிக்க முடியாது என்றும், அதனால் அதனை மத்திய அரசின் ஆளுகைக்கு எடுப்பது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது யாழ். மாநகர சபையால் பராமரிக்க முடியும் எனவும், அந்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகளை விரைவாக எடுப்பதாகவும் யாழ். மாநகர மேயர் கூறினார். குறித்த கலாசார மையத்தை நிர்வகிப்பதற்குரிய ஆளணியை விரைந்து உருவாக்கித் தருமாறு மணிவண்ணனால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பின்னர் இதேபோல் கொழும்பில் உள்ள தாமரைத் தடாகக் கட்டடத் தொகுதி எவ்வாறு பராமரிக்கப்படுகின்றது என்பதை மேயரும் ஆணையாளரும் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்தியாவுடன் இடர்பாடு

கள நிலை யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல் காய்களை நகர்த்த முற்படுகின்றது போலும் கோட்டாபய ராஜபக்ஷ அரசு.

குறிப்பாக, இந்தியாவைக் கையாளும் விவகாரத்தில் கோட்டா அரசின் அடி சறுக்கும் போலவே தோற்றுகின்றது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு எங்களைக் கட்டுப்படுத்த முடியாது, எங்களின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலது கையான பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் வீரகேசரா முழக்கமிடுகின்றார். அமைச்சர் விமல் வீரவன்ஸவில் தொடங்கி பௌத்த, சிங்களத் தீவிரப் போக்குடைய பல அமைச்சர்களும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளும் இந்தப் பல்லவியைத் தான் பாடுகின்றார்கள்.

தற்போதைய சர்வதேச உறவாடல் போக்கிற்கு அமைய இந்தியாவை அனுசரித்துப் போவதற்காக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குத் தாரை வார்ப்பதற்கு ஆட்சித் தலைமை தயார். எனினும் தனக்குக் கொழுகொம்பாகத் தான் பிடித்திருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதம் அதற்கு விடுவதாயில்லை என்ற இக்கட்டு ஆட்சித் தலைமைக்கு. அதனால் அரசுத் தலைமை இது விடயத்தில் இரு தலைக் கொள்ளி எறும்பாய்த் தவிக்கின்றது.

தங்கள் ஆட்சேபத்தை மீறி, அதனைப் புறமொதுக்கி, உதாசீனம் செய்து விட்டு இந்தியாவுக்குக் கிழக்கு முனையத்தைக் கையளிப்பதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் முயலுவார்களாயின் அதனை நீதிமன்றம் மூலம் தடுப்பதற்கு ஆளும் தரப்பில் ஒரு முயற்சி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆளும் தலைமையே இது விடயத்தில் தன்னுடைய நெருக்கடியை – சிக்கலை – தவிர்த்துத் தணிவிப்பதற்காக இப்படி நீதிமன்ற விதிமுறையை தனது தரப்புகளுக்குக் காட்டித் தூண்டி ஊக்குவித்திருக்கலாம்.

சர்வதேச அழுத்தங்களை – நெருக்குதல்களை – இப்படி நீதிமன்ற நடவடிக்கை மூலம் சமாளிக்கும் ஒரு தந்திரோபாயம் பொதுவாக அரசுத் தலைமைகளினால் முன்னெடுக்கப்படுவதுதான்.

*“நாங்கள் என்ன செய்ய, எங்கள் நாட்டு நீதிமன்றங்கள் அப்படி உத்தரவிட்டு விட்டன. அதனை மீறி நாம் ஒன்றும் செய்ய முடியாது. எங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளன.”* என்று சம்பந்தப்பட்ட நாட்டுக்கு எமது நாட்டின் அரசுத் தலைவர்கள் கூறி சமாளித்து விடுவார்கள். இது சர்வதேச விவகாரதங்களைக் கையாள்வதில் ஒரு சாணக்கிய தந்திரம்தான்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழான வடக்கு – கிழக்கு இணைப்பை இப்படித்தான் இலங்கையின் உயர்நீதிமன்றத் தீர்ப்பைக் காட்டி துண்டிக்கும் கைங்கரியத்தை ஒப்பேற்றியது கொழும்பு. ஒப்பந்த வாசகங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு நீதிமன்றத் தரப்பு நல்ல காரணமாயிற்று இலங்கைக்கு.

நல்லரட்ணம் சிங்கராஜா வழக்கிலும் இது நடந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் முறையிட்டார். உரிய நிவாரணம் – மீட்சி – கிடைக்கவில்லை. ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் குழுவில் அவர் முறையீடு செய்தார். அவருக்கு சார்பாக அது பரிந்துரைத் தீர்ப்பு வழங்கியது.

குடியியல், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டயத்தில் 1980 இல் இலங்கை ஒப்பமிட்டது. பின்னர் அதன் திருத்தம் மீதான விருப்ப நெறிமுறைப் பட்டயத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1997 இல் ஒப்பமிட்டார். இந்தப் பட்டயங்களின் படி ஜெனிவா மனித உரிமைகள் குழுவின் தீர்ப்பை இலங்கை நடைமுறைப்படுத்தி சிங்கராஜாவை விடுதலை செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால் இலங்கை நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படாத அல்லது அங்கீகரிக்கப்பட்டாத எந்த சர்வதேச ஒப்பந்தமும் நாட்டைக் கட்டுப்படுத்தாது என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் ஜெனிவா வழிகாட்டல் தூக்கிக் கடாசப்பட்டது.

நீதிமன்றத்தின் மூலம் இந்தியா உட்பட்ட சர்வதேசத்தைத் தூக்கிக் கடாசும் தந்திரோபாயத்தை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்குமானால் அதே தந்திரத்தை இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்துவது குறித்து பாரதம் சிந்திப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும், மாகாண சபை முறைமைக்கும் வழி செய்த 1987 ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக இன்னொரு முக்கிய ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ளது. 1976 ஆம் ஆண்டின் ‘இலங்கை – இந்திய கடல்சார் ஒப்பந்தம்’ அது. இந்த ஒப்பந்தத்தின் கீழ்தான் இந்தியா அதுவரை உரிமை கோரி வந்த கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்தார் இந்தியப் பிரதமரர் இந்திரா காந்தி. அந்த ஒப்பந்த வாசகங்களுக்கும் இந்திய நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ சட்ட அங்கீகாரத்தை இந்திராவோ அதற்குப் பிறகு வந்த பிரதமர்களோ இதுவரைப் பெறவில்லை.

1987 ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை இலங்கை நீதிமன்றத்தைக் காட்டி இலங்கை அரசு மீறும் என்றால், அதே மாதிரி 1976 ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய கடல்சார் ஒப்பந்தத்தையும் இந்திய நீதிமன்றத்தை முன்னிறுத்தி இந்தியா மீற முடியும். அத்தகைய சூழலில் கச்சதீவு மீதான உரிமைச் சர்ச்சை மீளவும் உயிரோட்டம் பெறும்.

இலங்கைக்கு இந்த வினைகள் தேவையா? கோட்டா அரசே தீர்மானிக்கட்டும்.

# பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு அஞ்சாதீர்: பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளுங்கள்

## மக்களிடம் சுகாதார சேவைகள் திணைக்களம் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

சமூகத்தில் கொரோனாத் தொற்றுப் பரவாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கோ அல்லது பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கோ எவரும் அச்சம்கொள்ளத் தேவையில்லை.

– இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தவறான புரிதல்கள் அல்லது கற்பனையின் நிமித்தம் விபரீதமான முடிவுகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பண்ணையிலுள்ள மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

‘கொரோனா தொற்று தீவிரமாக பரம்பலுள்ள பிரதேசங்களுக்குச் சென்று வந்தால் அல்லது தொற்று அடையாளம் காணப்பட்டவருடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தால் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களுக்கு பி.சிஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவுடன் அந்தத் தொற்று சமூகத்திலுள்ள ஏனையவர்களுக்குப் பரவாமல் தடுப்பதற்காக அவரோடு நேரடியாகத் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தபடுகின்றனர். அவர்கள் இரு வாரங்கள் தனிமைப்படுத்துவதுண்டு.

ஆனால், அவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் சமூகத்தில் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றனர் என்று எமக்குப் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

உண்மையில் பலருக்குத் தொற்றை ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது. எனவே, சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டவர்கள் சமூகப் பொறுப்பை உணர்ந்து அவர்கள் அந்தப் பொறுப்போடு கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் தொற்று நோய் பரவுவதைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

இதேவேளை, கொரோனாத் தொற்று தீவிரமாக பரம்பலுள்ள பிரதேசங்களுக்கு நீங்கள் சென்று வந்தால் உங்களை நீங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் உங்கள் குடும்பத்திலே உங்கள் உறவினர்களுக்கு இந்தத் தொற்று ஏற்படாதவாறு பாதுகாத்துக்கொள்ளலாம்.

இந்தப் பி.சி.ஆர். பரிசோதனை என்பது மிக எளிமையான சாதாரணமான ஒரு பரிசோதனையாகவே இருக்கின்றது. அதற்கு எவரும் பயப்படவோ – அச்சமடையவோ தேவையில்லை. இரண்டு வார காலத்துக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பொறுப்புணர்வோடு நடந்து கொண்டால் சமூகத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

கொரோனாத் தொற்று என்பது பெரும்பாலானா சந்தர்ப்பங்களில் தொற்று நோய் அறிகுறி இல்லாமலே பலருக்கு நிறைவுக்கு வருகின்றது. சிலருக்கு மட்டும் நோய் அறிகுறிகளுடன் நிறைவுக்கு வருகின்றது. இதுவரைக்கும் வடக்கு மாகாணத்தில் இணங்காணப்பட்டவர்களில் ஒருவர் மட்டும்வவுனியாவிலே இறந்திருக்கின்றதைத் தவிர பெரும்பாலானவர்களுக்கு நோய் அறிகுறிகளுடன் எளிமையாகக் குணமாகி வருகின்றார்கள்.

ஆயினும், சிலர் தவறான புரிதல் காரணமாக அதாவது தங்களுக்கு நோய் ஏற்பட்டால் பாரதூரமான விளைவு அல்லது இறப்பு ஏற்படும் என்று அச்சமடைகின்றனர். இப்படியான வீண் கற்பனைகளால் விபரீதமான முடிவுகளுக்கும் சிலர் வந்திருக்கின்றனர். அது மிகவும் வேதனைக்கும் கவலைக்கும் உரிய விடயம்.

எனவே, பி.சி.ஆர். பரிசோதனை என்பது அல்லது தனிமைப்படுத்தல் என்பது சமூகத்தில் இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கையே தவிர எவரையும் புண்படுத்துவதற்காக மேற்கொள்ளவில்லை. இது மிக எளிமையான பரிசோதனை. இதன்மூலம் அவர்கள் தங்களைச் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக்கொண்டால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் மற்றவர்களுக்கு ஏற்படாமல் தடுக்க முடியும். ஆகையினால் இதனை அறிந்து அல்லது உணர்ந்துகொண்டு விபரீதமான முடிவுகளுக்கு வராமல் உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ளலாம்.– என்றார்.

# லசந்த, பிரகீத், தாஜுதீன் ஆகியோர்களின் நிலைமையா ஹரின் பெர்னாண்டோவுக்கும்?

## ராஜித சேனாரத்ன கேள்வி



கொழும்பு, ஜன.13

நாடாளுமன்றத்தில் கூறப்படும் விடயங்களை நீதிமன்றத்தால் கூட சவாலுக்கு உட்படுத்த முடியாது. அவ்வாறிருக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் கூறிய விடயங்களுக்காக ஜனாதிபதி உயிர் அச்சுறுத்தல் விடுப்பது பொருத்தமானதல்ல. மேலும் லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட மற்றும் வசீம் தாஜுதீன் ஆகியோரின் நிலைமையா எதிர்காலத்தில் ஹரினுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

நீங்கள் ஜனாதிபதியாக இருப்பதை விட பாதுகாப்பு செயலாளராகச் செயற்பட்டதையே நாம் விரும்புகின்றோம் என்று பௌத்த மகா சங்கத்தினர் கூறியமையின் பொருள் ஜனாதிபதி பதவி அவருக்கு பொரத்தமானதல்ல என்பதேயாகும்.

மாறாகப் பாதுகாப்பு செயலாளராக இருந்த போது வன்முறையாக செயற்பட்டமையைப் போன்று இப்போதும் செயற்பட வேண்டும் என்ற கோணத்தில் அவர்கள் அதனைக் கூறவில்லை என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

# கொழும்பில் போக்குவரத்தை நவீன மயமாக்க புதிய சொகுசு பஸ்கள் வாங்குவதற்கு ஒப்புதல்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 200 புதிய சொகுசு பஸ்கள் வாங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த முடிவு அறிவிக்கப்பட்டது. நகர போக்குவரத்துச் சேவைக்கு வசதியாக போக்குவரத்து அமைச்சால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய பஸ்கள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார்களைக் கொண்டு பொதுப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, முதற்கட்டமாக 200 இற்குக் குறைந்த இரட்டைத் தட்டு பஸ்கள் குறுகிய தூர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வாங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் வாரிசுகளினால்தான் நாட்டில் ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய ஆபத்து!

## இந்தியப் பிரதமர் மோடி விசனம்



அரசியலில் வாரிசுகள் தலைமை வகிப்பதுதான் மிகப்பெரிய ஜனநாயக ஆபத்து என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் தங்கள் வாரிசுகளை அரசியலில் புகுத்துவதற்கு கண்டனம் தெரிவித்த மோடி இளைஞர்கள் பெருமளவு அரசியலுக்கு வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தேசிய இளைஞர் நாடாளுமன்றம் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக கலந்துக் கொண்ட பிரதமர் மோடி தங்கள் குடும்பத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியலில் வெற்றி காணலாம் என்று கனவு காண் போரின் காலம் முடிந்துவிட்டது என்று கூறினார்.

தேசத்தை முன்னிலைப்படுத்தாமல் குடும்ப அரசியல் சுயநலத்தையே முன்னிலைப்படுத்துவதாகவும் மோடி விமர்சித்தார். இத்தகைய அரசியல் வாரிசுகள் சட்டத்தை மதிப்பதில்லை என்றும் கூறிய பிரதமர் மோடி சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் கொண் டாடப்படும் சூழலில் இளைஞர்கள் அரசியலுக்கு வரு மாறு கேட்டுக் கொண்டார்.

# 50 ஆவது நாளை எட்டியது விவசாயிகளின் போராட்டம்



புதுடெல்லி,ஜன.13

டெல்லியில் விவசாயிகள் போராட்டம் இன்று 50 ஆவது நாளை எட்டி உள்ளது.

மத்திய அரசு கொண்டுவந்த புதிய வேளாண் சட்டங் களுக்கு எதிராக டெல்லியில் விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் வேளாண் சட்டங்களுக்கு எதிரான மனுக்கள், வேளாண் சட்டங்களை எதிர்த்து போராடி வரும் விவசாயிகளை அப்புறப்படுத்தக்கோரி தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே தலைமையிலான அமர்வு முன் நேற்று மீண்டும் நடைபெற்றது.

சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களையும் அமுல் படுத்துவதற்கு தடை விதித்து உச்ச நீதிமன்றம்நேற்று உத்தரவிட்டது. அதே நேரத்தில் இந்த சட்டங்களை ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்கு ஒரு குழுவையும் உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.

உச்ச நீதிமன்றம் அமைத்த குழு முன் ஆஜராக மாட்டோம், அதே நேரத்தில் 15 ஆம் திகதி மத்திய அரசு நடத்தும் பேச்சில் பங்கேற்போம் என விவசாய அமைப் புகள் அறிவித்துள்ளன.

இந்நிலையில் மத்திய அரசின் 3 வேளாண் சட் டங்களுக்கு எதிராக டெல்லியில் 50 ஆவது நாளாக விவசாயிகள் குளிரையும் பொருட்படுத்தாமல் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே காஞ்சிபுரம் அருகே உள்ள பல்வேறு கிராமங்களில் வேளாண் சட்ட நகலை எரித்து விவசா யிகள் போகிப் பண்டிகை கொண்டாடினர்,

காஞ்சிபுரம், வாலாஜாபாத், உத்திரமேரூரில் வேளாண் சட்ட நகல்களை எரித்து மத்திய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

# பத்து மாநிலங்களில் பறவைக் காய்ச்சல்!



ஜார்கண்ட் மாநிலத்தில் காகங்கள், மைனாக்கள் இறந்து கிடந்தமையைத் தொடர்ந்து 2 ஆயிரத்து 500 பறவைகளின் மாதிரிகள் சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே கேரளா, ராஜஸ்தான், இமாச் சல் பிரதேசம், குஜராத், ஹரியானா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், டெல்லி, மகா ராஷ்டிரா மற்றும் உத்தரகாண்ட் மாநிலங் களில் பறவைக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இந்நிலையில் ஜார்கண்ட் மாநிலத்தின் தும்கா மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் ஏராளமான மைனாக்கள் மற்றும் காகங்கள் இறந்து கிடந்தன. இதையடுத்து ஏற்பட்ட பீதி யைத் தொடர்ந்து 2 ஆயிரத்து 500 பறவை களின் மாதிரிகள் சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மத்திய பிரதேச மாநிலத்தில்

# விஷ சாராயத்துக்கு பலியானோர் எண்ணிக்கை இருபதாக உயர்வு



மத்திய பிரதேச மாநிலத்தில் விஷ சாராயம் குடித்து பலியா னோர் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது.

மொரேனா மாவட்டம் பகவாலி, மான்பூர் கிராமங்களில் கடந்த 11ஆம் திகதி இரவு சாராயம் அருந்தியவர்கள் திடீ ரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு, அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இந்நிலையில் விஷ சாராயம் குடித்து பாதிக்கப்பட்டோரில், மேலும் 8 பேர் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளனர்.

இந்த சம்பவம் குறித்து இரங்கல் தெரிவித்துள்ள மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், மொரேனா மாவட்ட கலால் அதிகாரி, பொலிஸ் அதிகாரி உட்பட 4 அரசு அதிகாரிகளை பணியிடைநீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளார்.


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1989.07.18 | பிறந்த திகதி - 1988.05.20 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூராடம் | நட்சத்திரம் - புனர்பூசம் |
| செவ் - 4 இல் | செவ் - 7 இல் |
| பாவம் - 59 | பாவம் - 67 |
| சூ/செ - 4 இல் | கல்வி - BSc. பட்டதாரி |
| கல்வி - A/L | தொழில் - ஆசிரியர் |
| தொழில் - புடவைக்கடை | எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம் |
| எதிர்பார்ப்பு - சாதாரண பெண் | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528


# புதிதாக 7 பேர் அமைச்சர்களாக கர்நாடகத்தில் பொறுப்பேற்றனர்



கர்நாடகத்தில் எடியூரப்பா தலைமை யிலான அரசில் புதிதாக 7 பேர் அமைச் சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர்.

நாகராஜ், உமேஷ் கட்டி, அரவிந்த் லிம்பாவலி, முருகேஷ் நிரானி, சங்கர், யோகீஸ்வரா, அங்காரா ஆகியோர் எடி யூரப்பா அமைச்சரவையில் இணைந்துள் ளனர்.

பெங்களூரில் நடைபெற்ற நிகழ்ச் சியில் ஆளுநர் வாஜுபாய் வாலா அவர் களுக்குப் பதவியேற்பு உறுதிமொழி செய்து வைத்தார்.

2019ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இருந்து சட்டமன்ற உறுப்பி னர்கள் 17 பேர் விலகி பா.ஜ.கவில் சேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

அவர்களில் நாகராஜ், சங்கர் ஆகிய இருவருக்கு முன்பு உறுதியளித்தபடி இப்போது அமைச்சர் பதவி வழங்கப்பட் டுள்ளது. காங்கிரஸில் இருந்து அவர் களை பா.ஜ.கவில் சேர்க்க உதவிய யோகீஸ்வராவுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

# வெளியானது 'மாஸ்டர்'!




லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள மாஸ்டர் படம் இன்று தியேட் டர்களில் வெளியான நிலையில் ரசிகர்கள் உற்சாகத்துடன் கொண்டாடினர்.

நடிகர் விஜய்யின் 64 ஆவது படம் 'மாஸ்டர்'.

லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள இப்படத்தை, கடந்த ஏப்ரல் மாதமே ரிலீஸ் செய்ய திட்டமிட்டிருந்தனர். கொரோனா பரவல் காரணமாக தியேட்டர்கள் மூடப்பட் டதால், மாஸ்டர் படத்தின் ரிலீஸ் தள்ளிப் போனது. இப்படத்தை ஓ.டி.டியில் வெளியிட பேச்சு நடைபெற்றது. இருப்பினும் படத்தை தியேட்டரில் தான் வெளியிடுவோம் என படக்குழு திட்டவட்டமாக கூறியது.

இந்நிலையில், மாஸ்டர் படம் இன்று தியேட்டர்களில் வெளியாகி உள்ளது. தியேட்டரில் விசிலடித்து, ஆரவாரம் செய்து படம் பார்த்து எவ்வளவு நாளாச்சு என ஏக்கத்துடன் காத்திருந்த ரசிகர்களுக்கு, மாஸ்டர் படம் விருந்தாக அமைந்துள்ளது. படத்தின் முதல் காட்சி இன்று அதிகாலை 4 மணிக்கு போடப்பட்டது. அப்போது விஜய்யின் பேனருக்கு பாலாபிஷேகம் செய்தும், பட்டாசு வெடித்தும் ரசிகர்கள் ஆராவாரம் செய்தனர்.

# ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்கு மீண்டும் போட்டி அன்டோனியோ குட்டெரெஸ் அறிவிப்பு



ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலர் பதவிக்கு மீண்டும் போட்டியிட அன்டோனியோ குட்டெரெஸ் முடிவு செய்துள்ளார்.

இதுகுறித்து தமது விருப்பத்தை ஐ.நா. பொதுச்சபை தலைவர் மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாக அவரது செய்தித் தொடர்பாளர் ஸ்டெஃபானி துஜாரிக் அறிவித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஐ.நா. பொதுச் செயலராக இருந்து வரும் குட்டெரெஸின் பதவிக் காலம் வரும் டிசம்பர் 31 ஆம் திகதி உடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே நாளில் கொரோனாவுக்கு நான்காயிரத்துக்கும் அதிக பலி

உலக அளவில் உயிரிழப்பு மற்றும் பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனா தொற்றால் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு அடைந்துள்ளனர். இதனால் அங்கு பாதிப்பு எண்ணிக்கை 2.33 கோடியை தாண்டியுள்ளது.

கொரோனா வைரஸால் ஒரு நாளில் மட்டும் நான்காயிரத்துக்கும் அதிக மானவர்கள் உயிர் இழந்துள்ளனர்.அதே நேரம் அங்கு கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3.89 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1.37 கோடியைத் தாண்டியுள்ள நிலையிலும் தற்போது 91 லட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சீன தயாரிப்பான சினோவாக் தடுப்பூசியை போட்டுக் கொண்டார் இந்தோனேசிய அதிபர்

இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ சீன நிறுவனம் தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸை எடுத்துக் கொண்டார்.

சீன பயோ – பார்மாசூட்டிக்கல் நிறுவனம் தயாரித்துள்ள சினோவாக் தடுப்பூசியை முதல் ஆளாக ஜோகோ விஷி போட்டுக் கொண்டார். அவர், தடுப்பூசி எடுத்துக்கொள்ளும் காட்சி நேரலையில் மக்களுக்கு காண்பிக்கப்பட்டது.



அந்த நிகழ்வின் பின்னர் கருத்து தெரிவிக்கையில் மக்கள் அனைவரும் எந்தவித அச்சமும் இன்றி கொரோனா தடுப்பூசியினை எடுத்துகொள்ளுமாறு வலியுறுத்தினார்

# கியூபா பயங்கரவாத நாடு மீண்டும் அமெரிக்கா அறிவிப்பு



கியூபாவை பயங்கரவாத ஆதரவு நாடாக அமெரிக்கா மீண்டும் அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பாம்பியோ வெளியிட்டார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கியூபா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக மோதல்போக்கு நீடித்து வந்த நிலையில், ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் இருநாடுகளுக்கும் இடையே நட்பு மலர்ந்தது.

அதனைத்தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து கியூபாவை அமெரிக்கா நீக்கியது. இந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப்தலைமையிலான நிர்வாகம் கியூபாவை பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடாக மீண்டும் அறிவித்துள்ளது. ஜனாதிபதி ட்ரம்பின் பதவி காலம் முடிய இன்னும் சில தினங்களே இருக்கும் நிலையில் அவர் கியூபாவுக்கு எதிரான இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கியூபாவில் கடந்த 1959 ஆம் ஆண்டில் நடந்த புரட்சி மூலம் பிடல் காஸ்ட்ரோ ஆட்சியைப் பிடித்ததை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான தூதரக உறவு முறிந்தது என்பது நினைவு கூரத்தக்கது.

# வலுப்படுத்தபடும் இராணுவம் வடகொரியா அதிபர் அதிரடி

வடகொரியாவின் இராணுவ படைகள் மற்றும் அணுசக்தி பலத்தை மேலும் வலுப்படுத்த அதிபர் கிம் ஜாங் உன் தனது அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோ பைடன் பதவியேற்க சில நாட்களே உள்ள நிலையில் வடகொரியா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பியோங்யாங் பகுதியில் இராணுவ உயரதிகாரிகளுடன் நடைபெற்ற மாநாட்டில் பேசிய கிம் ஜாங் உன், படைகள் எப்போதும் போர் நிலைக்கு தயாராக இருக்க வேண்டும் என்றும், எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்கும் வண்ணம் செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

மரக் கன்றுகள் விற்பனைக்கு!

இயற்கை முறையில் பராமரிக்கப்பட்ட நல்ல தரமான மரக் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.







கற்பகவனம் விற்பனை நிலையம். 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam) 021 492 7778

# உக்ரைன் சுற்றுலாப் பயணிகளால் கொரோனா கொத்தணி தோன்றாது!

## அரசு உத்தரவாதம்

கொழும்பு, ஜன.13

உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளால் கொவிட் - 19 வைரஸ் கொத்தணி ஒருபோதும் தோற்றம் பெறாது. சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை முழுமையாக செயற்படுத்தி பயணிகள் வருகை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படும்என அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தேசிய பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் பாரிய பங்களிப்பு செலுத்துகிறது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை சேவையில் 30 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களின் வாழ்க்கைத்தரம் பல வழிமுறைகளில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவே சுற்றுலாத்துறை சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி வரை உக்ரைன் நாட்டு சுற்றுலாப்பிரயாணிகள் 1,004 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்கள், இவர்களில் 3 பேர் மாத்திரம் கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆகவே உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளால் கொவிட் - 19 கொத்தணி ஒருபோதும் தோற்றம் பெறாது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் அனைவருக்கும் பொதுவானவை. சுற்றுலாப் பிரயாணிகளுக்கு எவ்வித சிறப்பு சலுகைகளும் இந்த விடயத்தில் வழங்கப்படவில்லை. ஆகவே, உக்ரைன் பயணிகள் தொடர்பாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடும் கருத்துக்கள் பொய்யானவை.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின், சுற்றுலாத்துறையை நெருக்கடியான நிலையில் ஆரம்பிக்க வேண்டும். குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்படும். கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் எழுந்துள்ள சவால்களை வெற்றிகொள்வது கட்டாயமாகும். - என்றார்.




# ஹரின் பெர்னாண்டோவுக்கு உச்சக் கட்டப் பாதுகாப்பு!

## பொலிஸ்மா அதிபரிடம் நாமல் கோரிக்கை



நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு உச்சகட்டப் பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். காரணம் அவர் அங்கத்துவம் வகிக்கும் கட்சிக்குள் காணப்படும் பிரச்சினைகளால் ஹரினுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் கூட அந்தப் பழியை ஜனாதிபதியின் மீது சுமத்திவிடக் கூடும் என்று இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று எண்ணுகின்றேன். காரணம் அவர் அங்கத்துவம் வகிக்கும் கட்சிக்குள்ளேயே தற்போது பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவ்வாறு கட்சிக்குள் காணப்படும் பிரச்சினைகளில் ஹரின் பெர்னாண்டோ தலையிடுவாரானால் அதன் மூலம் அவருக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் அந்த பழியை ஜனாதிபதியின் மீது சுமத்தக் கூடும்.

எனவே நாமும் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு உச்சபட்ச பாதுகாப்பை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். அவரது கட்சிக்குள் காணப்படும் உள்ளக பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்என்றுநாம்எண்ணுகின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளன எனக் கூறியுள்ளார். சஜித் பிரேமதாஸவின் வீடமைப்பு அமைச்சு இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கே எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய அவர்களுக்குள் சில சிக்கல்கள் காணப்படுவதாகத் தெரிகிறது. எனவே, தான் ஹரினுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றோம். - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.01.2021இல் வெளியிடப்பெற்றது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 24.02.2021 மற்றும் 25.02.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 24.02.2021 மற்றும் 25.02.2021 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. பண்பாட்டுக் கற்கையில் முதுகலைமாணி – 2020
4. சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி – 2017
5. கல்வியியலில் முதுமாணி
6. முது வியாபார நிர்வாகமாணி
7. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (முழுநேரம்) – 2017
8. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (முழுநேரம்) – 2018
9. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் (பகுதிநேரம்) – 2019 – வவுனியாவளாகம்
10. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் – 2020
11. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி – 2020
12. மருத்துவ விஞ்ஞானமாணி – 2012
13. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி – 2017
14. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி – 2018
15. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
16. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
17. மருந்தகவியல்மாணி (சிறப்பு) – 2017
18. மருந்தகவியல்மாணி (சிறப்பு) – 2018
19. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
20. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
21. விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
22. விஞ்ஞானமாணி (பொது – 2017
23. கணணி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி – 2017
24. கணணி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி – 2018
25. கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி – 2017
26. கலைமாணி (சிறப்பு) – 2017
27. கலைமாணி (சிறப்பு) – 2018
28. கலைமாணி (பொது) – 2017
29. கலைமாணி (பொது) – 2018
30. நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்) – 2017
31. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) – 2017
32. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) – 2017
33. சட்டமாணி – 2018
34. வியாபார நிர்வாகமாணி – 2017
35. வியாபார நிர்வாகமாணி (பொது) – 2017
36. வணிகமாணி – 2017
37. வணிகமாணி – 2018
38. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
39. பொறியியல் விஞ்ஞானமாணி – 2018
40. பொறியியல் விஞ்ஞானமாணி – 2019
41. பிரயோகவிஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017

**வவுனியா வளாகம்**

42. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமாணி (பொது)
43. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
44. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
45. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது)
46. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) (பொது)
47. கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
48. வியாபார முகாமைத்துவமாணி (பொது)
49. வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு)
50. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள்படிவங்கள்:**

விண்ணப்பதாரிகள் வேண்டுகோள் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**2. கட்டணங்கள்**

**இளமாணிப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 700.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா 600.00 |
| **மொத்தம்** | **2800.00** |

**பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. 2000.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 1000.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 1000.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா 600.00 |
| **மொத்தம்** | **4600.00** |

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும்; செலுத்தத் தேவையில்லை.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடவும்.

**கீழே தரப்பட்ட பொருத்தமான குறிப்பிலக்கத்தையே குறிப்பிடுக.**

❖ **இளமாணிப் பட்டதாரிகள்**

நேரில் சமுகமளிப்போர் – 970000052100308
சமுகமளிக்காதோர் – 970000052100340

❖ **பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள்**

நேரில் சமுகமளிப்போர் – 970000082100310
சமுகமளிக்காதோர் – 970000082100351

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். மேற் குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கான ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப் பிரதி மற்றும் பட்டச் சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிகளில் பட்டத்திற்கு தொடர்பான முகவரிக்கு 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் '35வது பட்டமளிப்பு விழா வேண்டுகோள் படிவம்' எனக் குறிப்பிடவும்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்:**

**உதவிப் பதிவாளர்/ அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்:**

**பிரதிப் பதிவாளர்/ பரீட்சைகள் கிளை,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

கடவுச்சீட்டு அளவு (35mm X 45mm) உடைய வெற்றுப் பின்புலத்துடனான புகைப்படம் ஒன்றினை வேண்டுகோள் படிவத்துடன் இணைத்து அனுப்புவதுடன், அதனது மென்பிரதியை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு பல்கலைக்கழக மாணவர் பதிவிலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **உதவிப்பதிவாளர்/ அனுமதிகள்கிளையின் தொலைபேசி இலக்கம் 021 222 6714** அல்லது **ar.admissions@yahoo.com** எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 29.01.2021**

**பதிவாளர்**